## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7.4(ஈ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக கருதப்பட வேண்டிய ரூபா 561,602 பணிக்கொடைக் கொடுப்பனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்யப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7.5(அ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக கருதப்பட வேண்டிய ரூபா 24,000 ஆன இயந்திரக் கொள்வனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7.8(இ) ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானம் வரிக்கு முன் இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டு முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி வரிக்கு முன் இலாபத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 7.4(அ) ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு மாற்றங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முகப்பில் தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,100,784 தொகையான இருப்பு மாற்றங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கம்பனிக்குச் சொந்தமான ரூபா 7,800,562 கிரயமான 19 வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்குச் சொந்தமாக காணப்படுகின்ற வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு 2022 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்பனைக் கிரயத்தை கணிப்பீடு செய்யும் போது ஆரம்ப இருப்பு மீதியில் ரூபா 9,186,655 மூலதன உயிரியல் இருப்பும், இறுதி இருப்பு மீதியில் ரூபா 8,423,475 மூலதன உயிரியல் இருப்பும் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா 763,180 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பெறுமதிகளின் மாற்றங்கள் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,843,245 தொகை காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிராந்துறுகோட்டை விவசாய பண்ணை விலங்கு உணவுக் களஞ்சியம், மோட்டார் அறை (Pumb House), இரண்டு ஆட்டுக் கொட்டகைகள், டொயட்டா டபள்கப் வண்டி, தம்மின்ன விவசாய பண்ணையில் மகேந்திரா டிறக்டர், டிறக்டர் டெயிலர் மற்றும் இரண்டு விவசாயக் கிணறுகளின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டு பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் கட்டிடம் 2018 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது இனங்கண்டு சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டின் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | முறையான எழுத்துமூல ஆவணப் பரிமாற்றமின்றி கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட நீராவி, துங்கம, கந்தளாய், சித்தப்புர மற்றும் முத்துவெல்ல என்ற விவசாய பண்ணைகளில் 2005-2010 ஆண்டுகளுக்கு இடையிலான காலப்பகுதியில் மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும் அந்த விவசாய பண்ணைகளுக்கு சொந்தமான கிரயம் ரூபா 25,073,083 ஆன கட்டிடங்கள் மற்றும் 164 பொருத்திகள், 26 வாகனங்கள், 45 அலுவலக உபகரணங்கள், 63 இயந்திர உபகரணங்கள் மற்றும் 03 | இந்த சொத்துக்கள் 2005/2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது கம்பனியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய விவசாயப் பண்ணைகளாகும். இந்த விவசாய பண்ணைகளை மீண்டும் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கும் போது அது தொடர்பாக எழுத்துமூலம் அறிவிக்கப்படாமையால் சொத்துக்கள் மாற்றும் | சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மின்பிறப்பாக்கிகள் மற்றும் 260 தளபாடங்களும் பொருத்திகளும் என்பன தொடர்ந்தும் கம்பனியின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களுக்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 1,873,629 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பௌதீக இருப்பு தொடர்பான மெய்மையாய்வு மகாவலி அதிகாரசபை அல்லது கம்பனியினால் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அந்த சொத்துக்களின் பௌதீகரீதியான இருப்பு கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இயலுமை காணப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அது தொடர்பாக மகாவலி அதிகார சபையால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.5.3 தொங்கல் கணக்குகள்**

| விடயம் | தொகை | தொங்கலாக காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கடன்பட்டோர் மீதியின் கீழ் ரூபா 617,513 தொங்கல் கணக்கு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | 617,513 | 04 வருடங்கள் | இந்த மீதி 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | தொங்கல் கணக்கை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 285,185 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வரிச் சான்றிதழ் பத்திரம் | இந்த மீதியில் 2021 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற பெறுமதியாகும். இது தொடர்பாக எதிர்வரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு நேரடியாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் வழங்க வேண்டியிருந்த துடன் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி | 2,991,095 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதி | 165,600 | மீதி உறுதிப்படுத்தல் | எதிர்வரும் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு நேரடியாக பெற்றுக் கொள்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தேவையான நடவடிக்கைகள் வழங்க வேண்டியிருந்ததுடன் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதி | 170,092 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | தம்மின்ன உள்ளக பண்ணை மீதி | 1,908,021 | மீதி உறுதிப்படுத்தல் | தம்மின்ன விவசாய பண்ணையில் ரூபா 1,908,021 மீதி பெரும்போகத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் 2022 ஆம் ஆண்டில் சீராக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட மீதியாகும். இது 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஊ) | பொது ஒதுக்கம்<br>-------------------------- | | | | |
| • | மகாவலி பொருளாதார முகவராண்மை | 403,918,731 | பெறுமதியை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் | இந்த மீதி 1999 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். இது தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதம் கம்பனியிடம் காணப்படவில்லை. கம்பனியாக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது இந்த மீதியில் ஒரு பகுதி விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக மகாவலி அதிகார சபை மீண்டும் ஒரு தடவை அறிவித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு நேரடியாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் வழங்க வேண்டியிருந்ததுடன் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| • கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| • ஐரோப்பா பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம் | 3,583,706 | மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்கு உரிய ஆவணங்கள் | - மேற்படி - | - மேற்படி - |
| • வெளிநாட்டு நிதியுதவி | 5,729,782 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன அமைச்சு - நீராவி விவசாய பண்ணைக்காக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,820,430 கடன்பட்டோர் மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் போது கம்பனிக்குச் சொந்தமாக காணப்பட்ட கால்நடைகளின் இருப்பு மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையால் அந்த விலங்குகள் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்த துடன் இந்த கடனை அறவிடுவதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தொடர்ச்சியாக மகாவலி அதிகாரசபைக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டின் போது இது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபையின் ‘‘எச்’’ வலயத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 5,373,970 ஆக இருந்த போதிலும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதி ரூபா 5,820,430 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 446,460 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த ரூபா 446,460 தொகையான மீதி கம்பனி, மொரகஹகந்த களுகங்கை செயற்திட்டம் கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது சொந்தமாக காணப்பட்ட உற்பத்தி மூலப்பொருள் இருப்பின் பெறுமதியாகும். | மீதியை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,893,711 நிலுவையான சம்பளத்தில் ரூபா 1,435,542 தொகையும், அந்த நிலுவை சம்பளத்துக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தவேண்டிய பணத்தில் ரூபா 312,054 தொகையும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தவேண்டிய பணத்தில் ரூபா 46,808 தொகையும் பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டீஎப்சீசீ வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 89,412 சேமிப்புக் கணக்கு 07 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது. | இந்த கணக்கை செயற்பாடு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | போதியளவான பணத்தை கையில் வைத்துக் கொண்டு மிகுதிப் பணம் வங்கியில் இடுவதற்கு பதிலாக ரூபா 869,285 மீளாய்வாண்டின் இறுதியில் கையில் இருந்தது. | எதிர்காலத்தில் வங்கியில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,325,556 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 5,793,006 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,467,450 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கம்பனியின் செயற்பாட்டு வருமானம் அதிகரித்தமையும், ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் குறைவடைந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் அமைப்பு விதியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளை உள்ளடக்கியிருந்ததுடன் ஆரம்ப பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்ட போதிலும் ஏனைய பங்குகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. விநியோகிக்கப்பட்ட 03 பங்குகள் ஏனைய தனியார் கம்பனியொன்றின் பணிப்பாளர்கள் மூன்று பேர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மகாவலி அதிகாரசபையின் உரித்திற்காக கம்பனி எந்தவொரு பங்கையும் வழங்கியிருக்கவில்லை. | இது தொடர்பாக மகாவலி அதிகாரசபைக்கு மீண்டும் ஒரு தடவை அறிவித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பங்குகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரியதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். இந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படு நிலை தொடர்பாக பணிப்பாளர்களை கண்டறிந்து கொள்ளப்படுமென தயவுடன் அறியத் தருகின்றோம். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ஜ்ல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் அமைப்பு அகவிதியில் 12 அடிப்படை நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மொத்த மற்றும் சில்லறையாக கோழிகளை வளர்த்தல் மற்றும் விவசாயிகளுக்கு கோழி வளர்த்தலுக்கு தேவையான உணவு உற்பத்தி, மாடு, பன்றி, கோழி போன்ற உயிரினங்களை பெருக்குதல், விற்பனை செய்தல், அபிவிருத்தி செய்தல், தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழம், தானிய வகைகள் சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் எருமை மாடு, பசுமாடு, கோழி, பன்றி மற்றும் ஆடு வளர்த்தல், கம்பனியின் விவசாய பண்ணைகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் என்பன சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள அரசாங்க தனியார் பங்குடமை வியாபார உடன்படிக்கை அமுல்படுத்தியதன் பின்னர் இந்த அமைப்பு அகவிதிப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | அமைப்பு அகவிதியில் காண்பிக்கப் பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்று வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,898,812 தொகையான 03 வாகனங்கள், மீள்மதிப்பீடு செய்யப்படாத வாகனமொன்றும், ரூபா 14,929,159 தொகையான கம்பனியின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான தெமட்டகொட பிரதேசத்தில் உள்ள காணி கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக 2022 ஆம் ஆண்டின் போதும் மகாவலி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மெய்மையாய்வின் போது பாதிப்படைந்த, பழுதுபார்க்கப்பட வேண்டிய, ஏலமிடல் நடவடிக்கைகள், உடைந்த மற்றும் துண்டுகளாக இனங்காணப்பட்ட ரூபா 9,453,140 பெறுமதியான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 312 நிலையான சொத்து விடயங்கள் 2022 மார்ச் வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்க்கும் நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கிராந்துருகோட்டை விவசாய பண்ணையில் அமைந்துள்ள பால் தயாரிக்கும் ஆலை ஆரம்பிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்ட இயந்திர பொறிமுறைகளின் மூலம் பால் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தொழிற்சாலையின் கூரை உடைந்திருந்தமை மற்றும் மழைநீர் தொழிற்சாலைக்குள் கசிந்தமை, வடிகாண் முறைமைகள் உடைந்திருந்தமை மற்றும் உள்ளக சுத்திகரிப்பு முறைமைகள் நலிவான நிலையில் காணப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகள் எழுந்திருந்தது. | அரசாங்க பங்குடமை வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புதிதாக தொழிற்சாலைக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரையிலும் தற்காலிகமாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொண்டு உற்பத்தி நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படுகின்றது. பொது சுகாதார பரிசோதகர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் தொழிற்சாலைக்குள் நிலம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. | கணக்காய்வின் போது சுகாதார பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சர்ச்சைக்குரிய காரணங்களை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் கால்நடை வள பிரிவில் அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளின் கீழ் இலக்கிடப்பட்ட உற்பத்தியை உள்ளபடியான உற்பத்தியுடன் ஒப்பீடு செய்த போது புறொயிலர் கோழி இறைச்சி உற்பத்தி 14 சதவீதமும், பன்றி இறைச்சி உற்பத்தி 24 சதவீதமும், ஆடு வளர்த்தல் 21 சதவீதமும், எருமை மாடு வளர்த்தல் 47 சதவீதமும் ஆக குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | கால்நடை வள அபிவிருத்திப் பிரிவை அபிவிருத்தி செய்வதற்கான மூலதன இயலுமை காணப்படாமையால் அரச தனியார் பங்குடமை உடன்படிக்கைகளை அமுல்படுத்தியதன் பின்னர் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலக்கிடப்பட்ட உற்பத்திகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2020/21 பெரும்போகத்தில் சோள பயிர்ச்செய்கைக்காக கம்பனியின் காணிகள் போக குத்தகை முறையின் கீழ் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி இதன் மூலம் பெறப்படுகின்ற குத்தகைப் பண வருமானம் இறைச்சி களஞ்சியப்படுத்துவதற்காக குளிரூட்டி கொள்கலனொன்றை கொள்வனவு செய்வதற்கும், புறொயிலர் கூடுகளை பழுதுபார்ப்பதற்கும் ஈடுபடுத்துவதற்காக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உழைக்கப்பட்ட ரூபா 1,093,550 தொகை 2022 மார்ச் வரையிலும் கம்பனியின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த புறொயிலர் அலகு இந்த சந்தர்ப்பம் வரையிலும் இலாபகரமான செயற்திட்டமாக இல்லாமையால் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உழைக்கப்பட்ட வருமானத்தை முறையான அங்கீகாரம் கிடைத்த நோக்கங்களுக் காக ஆக்கபூர்வ மானதாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்குச் சொந்தமான கிராந்துருகோட்டை விவசாய பண்ணையில் கால்நடை வளர்த்தல் பயிற்சி நிலையமொன்றாக மாற்றியமைக்கும் நோக்கில் மகாவலி அதிகார சபையின் ''சீ'' வலயத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 12,501,900 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாட்டு பண்ணை, ஆட்டுப் கொட்டகைகளை உள்ளடக்கிய நிர்மாணம் மற்றும் பொருட்கள் ரூபா 8,967,600 இற்கு மதிப்பிடப்பட்டு 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி இந்தக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக குறித்துரைத்த திட்டமோ அல்லது திட்ட முறைமையோ கம்பனியிடம் காணப்படாதிருந்தமையால் கையளிக்கப்பட்ட திகதி முதல் அந்த சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த விவசாய பண்ணைகளில் கால் நடை வளர்த்தல் பயிற்சி நிலையம் விவசாய பண்ணையின் தேவையின் பிரகாரம் அமைப்பதற்காக மூலதன இயலுமை கம்பனியிடம் காணப்படவில்லை. மேலும் கம்பனியின் தேவையின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படாதிருந்த துடன் இது கம்பனிக்குத் தேவையான பிரகாரம் அமைத்துக் கொள்வதற்கு அரச தனியார் பங்குடமை வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1986 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கிராந்துருகோட்டை கால்நடை விவசாய பண்ணைக்குரிய 57 கட்டிடங்கள் 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 07 கட்டிடங்கள் முழுமையாக உடைந்த நிலையில் காணப்பட்டமையால் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலையில் காணப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது இந்த 07 கட்டிடங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |